பக்கங்கள் 24+3

மாலை முரசு

# ஏப்ரல் 4ஆம் திகதி மோடி இலங்கைக்கு



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அடுத்த மாதம் முற்பகுதியில் இலங்கைக்கு விஜயம்

03

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 20 செவ்வாய்க்கிழமை 04.03.2025 | அதிர்வு 213

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# உண்மையைக் கண்டறிவதைக்கூட ஏற்க மறுக்கின்ற இந்த அரசு எதற்கு?

## சர்வதேசப் பொறிமுறையே வேண்டும் என்று சுமந்திரன் வலியுறுத்து

(ந.லோகதயாளன்)

“உண்மையைக் கண்டறிவதைக்கூட ஏற்றுக்கொள்ள மாட்டோம் எனத் தேசிய மக்கள் சக்தி அரசு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் சொல்லியிருப்பதை எமது மக்கள் அவதானத்துடன் பார்க்க வேண்டும். உள்நாட்டுப் பொறிமுறையில் எமக்கு நம்பிக்கை இல்லை. சர்வதேச ஈடுபாட்டுடன் உண்மையைக் கண்டறியும் பொறிமுறை ஏற்படுத்தப்பட வேண்டும்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அவர் இன்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

03

# மது விற்பனை நிலையத்துக்கு எதிராக நெடுந்தீவில் இன்று மக்கள் போராட்டம்




(எஸ்.நிதர்ஷன்)

மதுபான விற்பனை நிலையத்துக்கு எதிராக நெடுந்தீவில் மக்கள் இன்று செவ்வாய்க்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நெடுந்தீவு பிரதேச செயலகம் முன்பாக இன்று காலையில் ஒன்று திரண்ட மக்கள் மதுபானசாலைக்கு எதிராகப் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நெடுந்தீவு மதுபான விற்பனை நிலையத்துக்கு எதிராக அந்தப் பகுதி மக்கள் தொடர்ச்சியாகப் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வந்திருந்தனர்.

நெடுந்தீவில் வடக்கு மாகாண ஆளுநரின் பங்கேற்புடன் நடமாடும் சேவை நாளை புதன்கிழமை நடைபெறவுள்ள நிலையில், மக்கள் இன்று மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# கூட்டமைப்பாக மீண்டும் செயற்பட தமிழரசின் கதவு திறந்தே உள்ளது

## வெளியில் இருக்கும் பங்காளிக் கட்சிகளிடம் சி.வி.கே. தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கதவுகள் திறந்தே உள்ளன என்று அந்தக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.




யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் இன்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழரசுக் கட்சியோடு ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய மூன்று கட்சிகளுமாக நான்கு கட்சிகள் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட்டு வந்திருந்தோம். ஆனால், கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட காலத்தில் தனித் தனியாகப் போட்டியிட்டு கூட்டாக செயற்படுவது என்று தமிழரசுக் கட்சி தீர்மானித்தது. அதைத் தவறாகச் சித்தரித்து தமிழரசு தனிவழி என்றவாறாக பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு கூட்டமைப்பில் இருந்து கட்சிகள் வெளியேறியிருந்தன.

நாங்கள் கூட்டமைப்பை உடைக்க வேண்டும் என்று நினைக்கவில்லை. இப்போது கூட முன்னரைப் போல் மீளவும் கூட்டமைப்பாக ஒன்று சேர்ந்து இயங்குதவற்கான அழைப்பையே விடுத்திருக்கின்றோம்.

அந்த முயற்சியின் தொடராகக் கூட்டமைப்பில் இருந்த கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடி இருக்கின்றேன். ஆனால். அந்தக் கட்சிகளின் தலைவர்களை நான் சந்தித்தபோது சாதகமாகப் பரிசீலிப்பதாகச் சொன்னவர்கள் மறுநாளே தாங்கள் ஒரு புதிய கூட்டணியை உருவாக்கியிருக்கின்றனர்.

இப்படி ஒரு திட்டம் அவர்களிடம் இருக்கின்றது எனில் அதனை நேரடியாகவே எங்களிடத்தே சொல்லியிருக்கலாம். அதைவிடுத்து ஏமாற்று வித்தை காட்டியமையே எமக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

நாங்கள் அவர்களிண் புதிய கூட்டணியை எதிர்க்கவில்லை. அது அவர்களது உரிமை. ஆனால், அவர்களின் செயற்பாடே எமக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதைத்தான் நான் சொல்லி இருக்கின்றேன்.

தாம் ஒரு கூட்டணியை அமைத்துள்ளதாகவும், எங்களது கட்சியின் மத்திய குழுவோடு பேசிவிட்டு வருமாறும் புளொட் தலைவர் சித்தார்த்தன் எனக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

இவ்வாறு அவர்கள் கூறுவதில் என்ன அர்த்தம் உள்ளது? நாங்கள் ஒன்றும் சில்லறைக் கட்சி அல்ல. எம்மை யாரும் மலினப்படுத்தக் கூடாது.

ஈழத் தமிழினத்துக்காக நாங்கள் மீளவும் கூட்டமைப்பாக இயங்குவோம் வாருங்கள் என்றே இணக்கத்தின் அடிப்படையில் அழைப்பு விடுத்தோம். அதைவிடுத்து உங்களது கூட்டணியுடன் நாங்கள் வரப்போவதாகச் சொல்லவில்லை.

இந்த விவகாரத்தில் மிகவும் அப்பாவித்தனமாக நாங்கள் இருந்துவிட்டோமோ என்று எண்ணத் தோன்றுகின்றது. ஆனால், நாங்கள் இப்போதும் கூறுகின்றோம் கூட்டமைப்பில் இருந்து செயற்பட்டவர்கள் மீளவும் கூட்டமைப்புக்கு வருவதற்கான கதவுகள் திறந்தே உள்ளன.

அவர்கள் வராவிட்டால் தமிழரசுக் கட்சி மீண்டும் தனி வழியில் போவது இயல்பானது. ஆனாலும், தமிழ்த் தலைமைகளைக் கொண்ட கட்சிகளுக்கே தமிழ் மக்கள் தமது ஆதரவை வழங்க வேண்டும்.

அதற்காக எங்களுக்குப் பயம் என்றில்லை. தந்தை வழியில் வந்தவன் நான். தேசியத் தலைவரின் கொள்கையில் நிற்கின்றேன். எனக்குப் பயம் கிடையாது. ஆனால், தமிழர் நலன் சார்ந்து செயற்பட வேண்டியது அவசியம். அந்த அடிப்படையில்தான் சில முயற்சிகளை எடுத்துச் செயற்படுகின்றோம்." - என்றார்.

# ஆளுநர் வேதநாயகனின் பங்கேற்புடன் நெடுந்தீவில் நாளை நடமாடும் சேவை

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் பங்கேற்புடன் நடைபெறும் நடமாடும் சேவை நாளை புதன்கிழமை நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 5 அமைச்சுக்களின் செயலாளர்கள், அமைச்சுக்களின் கீழான அனைத்துத் திணைக்களங்களின் தலைவர்களும், அதற்கு மேலதிகமாக மத்திய அரசின் கீழான இலங்கை மின்சார சபை, வீதி



அபிவிருத்தி அதிகார சபை, கடற்றொழில் நீரியல்வளங்கள் திணைக்களம், கரையோர பாதுகாப்புத் திணைக்களம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஆகியவற்றின் பிராந்தியத் திணைக்களத் தலைவர்களும் இந்த நடமாடும் சேவையில் பங்கேற்கவுள்ளனர்.

இந்த அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் ஊடாக சேவைகளைப் பெற்றுக்கொள்ள விரும்பும் பொதுமக்கள் நடமாடும் சேவையில் கலந்துகொள்ளுமாறு வடக்கு மாகாண ஆளுநர் அழைப்பு விடுத்துள்ளார்.

# குளியாப்பிட்டியில் துப்பாக்கிச்சூடு!

## ஒருவர் படுகாயம்

குருநாகல் மாவட்டம், குளியாப் பிட்டி பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக குளியாப் பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குளியாப்பிட்டி பொலிஸ் பிரிவின் பிடதெனிய பகுதியில் உள்ள தொரப் பிட்டி தோட்டத்தில் அனுமதியின்றி தேங் காய் பறிக்கத் தோட்டத்துக்குள் நுழைந்த தற்காக குறித்த நபரை காவலாளி துப்பாக்கியால் சுட்டுள்ளார்.

துப்பாக்கிச்சூட்டை நடத்திய மெதிரி கிரிய பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய சந்தேகநபர், துப்பாக்கிச்சூட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட 12 துளை துப்பாக்கி யுடன் குளியாப்பிட்டி பொலிஸ் அதி காரிகளால் கைது செய்யப்பட்டுள் ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**ஏப்ரல் 4ஆம் திகதி**

மேற்கொள்ளவுள்ளார்.

ஏப்ரல் 4 ஆம் திகதி கொழும்பு வரவுள்ள இந்தியப் பிரதமர், 6 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார் .

கொழும்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமர சூரிய உட்பட்டோரைச் சந்திக்கவுள்ள இந் தியப் பிரதமர், சம்பூருக்குக் ஹெலியில் சென்று மின்திட்டம் ஒன்றை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

அதேபோல் அனுராதபுரம் ஸ்ரீமகா போதிக்குச் சென்று வழிபாடுகளிலும் அவர் ஈடுபடவுள்ளார் என்று அறியமுடி கின்றது.

இந்தியப் பிரதமரின் இலங்கைப் பயணத்தையொட்டி விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள இந்தியா வில் இருந்து உயர்மட்ட பாதுகாப்புக் குழு ஒன்று தற்போது கொழும்பு வந்துள்ளது.

முன்னதாக அதானி மின்திட்டம் தொடர்பில் இலங்கையில் சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில் இந்தியப் பிரத மர் நரேந்திர மோடியின் விஜயத்தின் போது அது தொடர்பில் முக்கியமாக ஆராயப்படும் என்று தெரிகின்றது.

**உண்மையை...**

“ஜெனிவா அமர்வின் ஆரம்பத்தில் பெப்ரவரி 25 அன்றும் நேற்றைய தினமும் இலங்கைக்கான பிரதிநிதி இலங்கையின் நிலைப்பாடு தொடர்பாக அறிக்கை வெளியிட்டுள்ளார். இவற் றிலே ஐ.நாவின் இத்தனை ஆண்டுகால முயற்சி அதாவது 2012 ஆம் ஆண்டு முதல் இலங்கையிலே பொறுப்புக்கூற லையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்து வதற்கு எடுத்துள்ள முயற்சிகளுக்குத் தடை செய்கின்ற வகையிலான கூற்றுக் கள் தற்போது வெளிவருகின்றன.

கடந்த காலங்களில் இருந்த அரசு களைப் போலவே 2015இல் மங்கள சமரவீர வெளிவிவகார அமைச்சராக இருந்தபோது மட்டும்தான் ஜெனிவாவில் இலங்கையும் சேர்ந்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இதன் பின்பு 30/1 என்ற தீர்மானத்தை இலங்கை ஏற்றுக்கொள்ள மாட்டாது என்ற கையோடு புதிய அரசு நல்லிணக்கம் சம்பந்தமான பல விடயங்களை வெளி விவகார அமைச்சர் விஜித ஹேரத் ஊடா கக் கூறியுள்ளது.

ஐ.நா. சபையுடன் நாம் இணங்கிச் செயற்படுவோம் என்று வெளிவிவ கார அமைச்சர் விஜித ஹேரத் அறிவித் துள்ளார். காணாமல் ஆக்கப்பட்டவர்க ளுக்கான அலுவலகம், இழப்பீடுகளுக் கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாட் டுக்கு உருவாக்கப்பட்ட அலுவலகம் ஆகிய மூன்றையும் பலப்படுத்தி அதன் மூலம் நல்லிணக்கப் பொறிமுறை ஒன்றை உருவாக்குவதன் மூலமாக இந்த நீண்ட காலப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் படும் என்று அவர் சொல்லியிருக்கின் றார்.

மீள நிகழாமைக்கு என 2015 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் வெளிவிவ கார அமைச்சர் சொன்னது ஒரு புதிய அரசமைப்பு தொடர்பானது. அது தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வா கக் கூறப்பட்டதோடு இந்த அரசும் பதவிக்கு வருவதற்கு முன்னர் மிகத் தெளிவாக புதிய அரசமைப்பு எனத் தெரிவித் துள்ளார்கள்.

இருந்தபோதும் இந்தக் கூட்டத் தொட ரில் அவர்கள் எதையுமே கூறவில்லை. மாறாக அவர்கள் சொன்ன நிறுவனங் களுக்குக் கூட 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்திலே போதிய ஒதுக்கீடுகள் செய்யப்படவில்லை.

பேச்சளவில் அன்றி நிதி ஒதுக்கீட்டிலே தான் இவை தெரியவரும். ஆனால், இந்த நிறுவனங்களுக்குப் போதுமான நிதி ஒதுக்கீடு கொடுக்கப்படவில்லை.

இதேநேரம் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முற்று முழுதாக நீக்குவோம் என வாக்குறுதியளித்த இந்த அரசு தற் போது அதற்குப் பதிலாக வேறு ஒரு சட் டத்தை இயற்றுகின்றோம் என்று சொல்லு கின்றார்கள். இவர்கள்தான் கடந்த காலத் தில் நாம் எந்தவிதமான மாற்றீடையும் ஏற்றுக்கொள்ள மாட்டோம், பயங்கரவாதத் தடைச்ச சட்டம் முற்றுமுழுதாக நீக்கப்பட வேண்டும் என்ற ஒரு கொள்கை நிலைப் பாட்டில் இருந்தவர்கள்.

ஐ.நாவில் நேற்றைய தினம் இலங் கைப் பிரதிநிதி சமர்ப்பித்த அறிக்கையிலே மிக முக்கியமான ஒரு விடயம் உண்டு. அதற்காகவே இன்றைய அவசர சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

சாட்சியங்களைச் சேகரிப்பதற்கான ஒரு பொறிமுறை தற்போது ஐ.நாடுகள் மனித உரிமைப் பேரவையின் தீர்மா னத்தின் பிரகாரம் மனித உரிமை உயர் ஸ்தானிகரின் அலுவலகத்தினாலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இது மிக, மிக முக்கியமானது. அதாவது போர்க் காலத்திலே இடம்பெற்ற சட்ட விரோத செயற்பாடுகள், மனித உரிமை மீறல்கள், சர்வதேச சட்டங்களை மீறிய சம்பவங்கள் தொடர்பாக இலங்கையில் எதுவுமே நடக்கவில்லை.

போர் முடிவடைந்து 15 ஆண்டுகள் முடிவடைந்து விட்டன. இந்தச் சாட்சியங் களைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்று ஐ.நா.மனித உரிமைகள் பேர வையின் தீர்மானத்துக்கு அமைவாக அந்தச் செயற்பாடுகள் நடந்துகொண்டு இருக்கின்றன. அதை தாங்கள் நிரா கரிப்பதாக இலங்கை அரசின் சார்பில் நேற்றைய தினம் சொல்லப்பட்டுள்ளது. இது மிக, மிக மோசமான செயற்பாடு. நடந்த உண்மைகளைச் சேகரிப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை, உண்மையாக இடம்பெற்றது என்பதை அறிவதில் எமக்கு ஆர்வம் இல்லை அல்லது அது மூடி மறைக்கப்பட வேண் டும் என்ற தோரணையில் இந்தப் புதிய அரசும் செயல்படுகின்றது.

நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமா னால் அது உண்மையின் அடிப்படை யிலேயே ஏற்படுத்தப்பட வேண்டும். உண்மையை மறைத்து எங்கேயும், எப்போதும் நல்லிணக்கம் ஏற்படப் போவதில்லை.

வடக்கு, கிழக்கு மக்களின் ஆணை இருப்பதாகக் கூறிக்கொண்டு அந்த வடக்கு, கிழக்கு மக்களின் முக்கிய கோரிக்கை பொறுப்புக்கூறல் சம்பந்த மான கோரிக்கை மனித உரிமை பேரவை யில் இவ்வளவு காலமாக இந்த தீர்மானங் களை, சாட்சியங்களைச் சேகரிக்கும் பணி நடைபெற்றுக்கொண்டு இருக் கின்றது. ஆகவே, இதை நீர்த்துப் போகும் வண்ணம் நாங்கள் எதிரானவர்கள் என்ற கூற்றை முற்று முழுதாக நிராகரிக்கின் றோம். அரசின் இந்த செயற்பாடு தமிழ் மக்களின் அபிலாஷையை மூடி மறைப்ப தாக உள்ளது.

இதேநேரம் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களும் இந்த அரசு உண்மை யைக் கண்டறிவதைக்கூட ஏற்றுக் கொள்ள மாட்டோம் எனச் சொல்லி யிருப்பதை அவதானத்துடன் பார்க்க வேண்டும்.

உள்நாட்டுப் பொறிமுறையில் எமக்கு நம்பிக்கை இல்லை. சர்வதேச ஈடுபாட்டு டன் உண்மை கண்டறியப்படும் பொறி முறை ஏற்படுத்தப்பட வேண்டும்.” - என்றார்.

# யாழ். பல்கலை ஊழியர் சங்கம் இன்று கவனவீர்ப்புப் போராட்டம்





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தால் இன்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று நண்பகல் 12 மணியளவில் யாழ். பல்கலைக்கழக பிரதான நுழைவாயில் முன்பாக ஒன்றுகூடிய பல்கலைக்கழக ஊழியர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

“சம்பளத்தைப் பொய்யாக உயர்த்தாதே, பதவி வெற்றிடங்களை உடனடியாக நிரப்பு, இடமாற்ற விண்ணப்பங்களுக்கு நடவடிக்கை எடு, பொதுச் சேவைக்கு 64 வீதம், எங்களுக்கு 58 வீதம் நீதியா?, முவு மாற்றாதே, MCA குறைப்பை நிறுத்து போன்ற கோஷங்கள் போராட்டக்காரர்களால் எழுப்பப்பட்டன.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் உள்ள அரச பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பல்கலைக்கழக ஊழியர்கள் அந்தந்த பல்கலைக்கழகங்களில் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வியாக்கியானத் தவறு

'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்பர். தெய்வம் இப்போதெல்லாம் நின்று அறுப்பதில்லை. அவ்வப்போதே காரியங்கள் - பின்விளைவுகள் - கனகச்சிதமாக நிறைவேற்றப்படுகின்றன. தண்டனைகள் தாமதிப்பதில்லைப் போலும்.

முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இப்போது அதனை நன்கு புரிந்து கொண்டிருப்பார் என்று நம்ப முடியும்.

சபாநாயகர் என்ற மிக உயர்ந்த பதவியைத் தாம் வகித்த காலத்தில் அதனைக் கீழ்த்தரமான வேலைகளுக்குப் பயன்படுத்தி, அதனால் அரசியல் லாபம் தேடியவர் அவர் என்பது பலரது கருத்து நிலைப்பாடு.

சபாநாயகர் என்ற கதிரையில் இருந்து கொண்டு, சட்டங்களுக்கும் பிற ஒழுங்கு விதிகளுக்கும் விடயங்களுக்கும் பிழையான வியாக்கியானங்களை வேண்டுமென்றே செய்து தவறிழைத்தவர் அவர். சபாநாயகர் பதவிக்குரிய சிறப்பு உரிமைகள் அப்போது அந்தத் தவறுகளிலிருந்து அவரைக் காப்பாற்றினாலும் அதன் விளைவு இப்போது முட்டிக் கொண்டு வந்து நிற்கின்றது.

தன் பதவிக்குரிய கடமையின் கீழ், வியாக்கியானம் அளிக்கும் உரித்துத் தமக்கு வழங்கப்பட்ட விடயங்களில், அவர் மிக மிக சின்னத்தனமாக நடந்து கொண்டிருந்தார்.

இணையப் பாதுகாப்புச் சட்டம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு முரணாக அந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு தவறான முறையில் துணை போனவர் அவர். அது தொடர்பில் தமக்கு இருந்த சட்ட வியாக்கியான அதிகாரத்தை - உரித்தை - அவர் பிழையாகப் பயன்படுத்தினார்.

பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பாக அரசமைப்பு கவுன்ஸில் எடுத்த முடிவை, அதன் தலைவராக இருந்து கொண்டு, சிறிய அட்சரகணித கணக்கையே தலைகீழாக மாற்றிப் பிழையாக வியாக்கியானம் செய்தார். வெளிப்படையான எண்ணிக்கைக் கணக்கையே குதர்க்க வாதம் பண்ணித் தலைகீழாக மாற்றினார் அவர். அதன் மூலம் அரசமைப்பு கவுன்ஸிலினால் நிராகரிக்கப்பட்ட - தெரிவு செய்யப்படாத - உண்மையான அங்கீகாரம் பெறாத - தேசபந்து தென்னக்கோன் பொலிஸ் மா அதிபராக முறையற்ற முறையில் நியமிக்கப்படும் தவறான முன்னுதாரணம் நடைமுறைக்கு வந்தது. இன்று அந்த நியமனம் உயர்நீதிமன்றுக்கு போய் பெரும் சிக்கலை ஏற்படுத்தி நிற்கின்றது. அந்தத் தவறான அர்த்தப்படுத்தலுக்காக - வியாக்கியானத்துக்காக - தண்டனையை அவர் சில சமயங்களில் உயர்நீதிமன்றத்திடமிருந்து பெற வேண்டியும் நேரலாம். அவர் அலங்கரித்த சபாநாயகர் என்ற உயர்ந்த பதவியின் சிறப்புரிமை அந்தப் பெரும் தண்டனைக்கான தவறிலிருந்து அவரைக் காப்பாற்றுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இப்போது அவர் பதவியிலிருந்தபோது கடைசி 9 மாதங்களில் - 2024 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் செப்டம்பர் 24ஆம் திகதி வரை மூன்று கோடி 34 லட்சம் ரூபா பெறுமதி எரிபொருளை - அதாவது மாதாந்தம் 40 லட்சம் ரூபா எரிபொருளை - ஒரு நாளைக்கு சராசரியாக ஒரு லட்சத்து முப்பதாயிரம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதி எரிபொருளை - அவர் பயன்படுத்தியிருக்கிறார் எனப் புதிய அரசு இப்போது குற்றஞ்சாட்டுகின்றது. அந்தக் குற்றச்சாட்டு தவறு என்று இப்போது விளக்கம் - வியாக்கியானம் - கொடுக்க முயல்கின்றார் முன்னாள் சபாநாயகர்.

பதவியில் இருந்த போது நாட்டின் தலைவிதியையே தலைகீழாக மாற்றும் விதத்தில் வேண்டுமென்றே சரியான விடயங்களுக்கு பிழையான விளக்கம், வியாக்கியானங்கள் செய்தவர், இப்போது அதேபோன்ற விளக்கம், வியாக்கியானங்களினால் மக்கள் முன் தலை குனிந்து நிற்கின்ற நிலைமை வந்திருக்கின்றது.

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பது இதைத்தான்.



# ஹட்டன் செனன் தோட்டத்தில் தீ; 20 குடியிருப்புகள் எரிந்து நாசம்!

## பாதிக்கப்பட்ட மக்கள் தற்காலிக இடத்தில்



(க.கிஷாந்தன், பொகவந்தலாவ எஸ். சதீஸ்)

ஹட்டன் செனன் தோட்டத்தில் கே.எம். பிரிவில் நேற்று (03) இரவு 07.30 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 20 தொழிலாளர்களது குடியிருப்புகள் முற்றாக தீக்கிரையாகியுள்ளன.

அதுமட்டுமன்றி இந்தத் தீ விபத்து காரணமாக இந்த வீடுகளில் குடியிருந்த 20 குடும்பங்களை சேர்ந்த 50 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வீட்டில் இருந்தவர்கள் கூச்சலிட்டதை அடுத்து அயலவர்கள் ஓடி வந்து தீயை அணைக்க முற்பட்ட போதும் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை.

அதனையடுத்து ஹட்டன் பொலிஸார், ஹட்டன் நகர சபையின் தீயணைப்பு படையினர் மற்றும் பொது மக்கள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்தனர். சுமார் 3 மணித்தியாலயங்களுக்குப் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

எனினும், 20 வீடுகளில் இருந்த பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், உடு புடைவைகள், தங்க நகைகள், பாட சாலை மாணவர்களின் சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் தீக்கிரை யாகியுள்ளன.

இந்தத் தீ விபத்தால் பதிக்கப்பட்ட 20 குடும்பங்களை சேர்ந்த 50 பேரை தற்காலிகமாக மாற்று இடங்களில் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரவிய தீயைக் கட்டுப்படுத்த முயற்சி செய்தவர்களில் 5 நபர்கள் சிறு சிறு தீ காயங்களுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தத் தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரையும் கண்டறியப்பட வில்லை என தெரிவிக்கும் ஹட்டன் பொலிஸார், ஹட்டன் பொலிஸ் கைரேகை அடையாளப் பிரிவுடன் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.







# தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று பார்வையிட்ட ஜீவன்!

(பொகவந்தலாவ எஸ். சதீஸ், க.கிஷாந்தன்)

ஹட்டன் செனன் தோட்டத்தில் தீ விபத்துக்குள்ளான குடியிருப்புக்களையும், பாதிக்கப்பட்ட மக்களையும் சென்று பார்வையிட்டதுடன் தேவையான உதவிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஹட்டன் செனன் தோட்டம், கே.எம். பிரிவு தோட்டத் தொழிலாளரின் தொடர் குடியிருப்பு ஒன்றில் நேற்றிரவு (03) தீ பரவல் ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து கலந்துரையாடியதுடன், தோட்ட நிர்வாகத்துடன் கலந்துரையாடி தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளேன்.

குறிப்பாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்கான தங்குமிட வசதி, அத்தியாவசிய தேவைகள் உட்பட உலர் உணவுப் பொருள்கள் அனைத்தையும் வழங்குமாறு தோட்ட நிர்வாகத்திடம் கேட்டுக்கொண்டேன்.

எனவே இது தொடர்பில் குறித்த தோட்டப் பகுதிக்கான பெருந்தோட்ட யாக்கத்திடம் பேசி அனைத்து வசதிகளையும்



செய்து தருவதாக தோட்ட நிர்வாகத்தினர் என்னிடம் தெரிவித்தனர்.

மேலும் இந்த தீ விபத்து தொடர்பில் இன்று (04) இடம்பெறவுள்ள நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்திலும், நாடாளுமன்றத்திலும் பேசி அவர்களுக்கான உரிய தீர்வையும் பெற்றுத்தருவதாகத் தெரிவித்திருந்தேன்.

இந்த தீ விபத்தால் பாதிக்கப்பட்ட வீடுகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன. தீ விபத்தில் எவருக்கும் பாதிப்புக்கள் ஏதும் ஏற்படவில்லை. மின் கசிவு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கக் கூடும் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.- என்றார்.

# கொக்குவிலில் இளைஞன் மீது வாள்வெட்டு; சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டனர்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். கொக்குவில் பகுதியில் உள்ள களஞ்சியசாலையில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவரின் விரல் துண்டாக்கபட்டுள்ள நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

கொக்குவில் பகுதியிலுள்ள களஞ்சியசாலை ஒன்றுக்கு மோட்டார் சைக்கிளில் வருகை தந்த இருவர் களஞ்சியசாலையினுள் இருந்த இளைஞனை வாளால் வெட்டிவிட்டுத் தப்பி சென்றுள்ளனர்.

இந்த நிலையில் விரல் துண்டாடப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் இளைஞன் அனுமதிக்



கப்பட்ட நிலையில் விரலை பொருத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. இதேவேளை, மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம்பொலிஸார் முன்னெடுத்து வரும்நிலையில் சந்தேகபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புத்தளம் அல்ஜித்தா மக்கள் பணிமனை மாணவருக்கு உபகரணங்கள் வழங்கியது



(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

புத்தளம் அல்ஜித்தா மக்கள் பணிமனை அலுவலகத்தால், இணங்காணப்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை சேர்ந்த மாணவர்களுக்கு மக்கள் மறுமலர்ச்சி முன்னணியால் பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மக்கள் மறுமலர்ச்சி முன்னணியின் பிரதி தலைவர் மௌலவி பீ.ஏ. சுப்யான் தலைமையில் இடம்பெற்றது.

பிள்ளைகளின் கல்வியைத் தொடர்வதில் பொருளாதார சிக்கல்களில் உள்ளனர். இதற்கு உதவும் முகமாகக் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு பாடசாலை செல்வதற்குத் தேவையான கல்வி உபகரணங்கள் மற்றும் பொருள்கள், தேவைப்பாடுகள் தொடர்பாக விண்ணப்பித்தவர்களுக்கே இவை வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உரையாற்றிய மௌலவி சுப்யான்,


கல்வி உபகரணங்களை பெறும் பிள்ளைகள் கல்வியை இடையில் விடாது தொடர்வதற்கு தேவையான கல்வி உபகரணங்கள் இந்தப்பொதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. எனவே பெற்றோர்கள் மிகப் பொறுப்புடன் தங்கள் பிள்ளைகளை கல்வியை இடைவிலகச் செய்து விடாமல் ஊக்கப்படுத்தி பாடசாலைக்கு அனுப்பி வைக்க வேண்டும். எங்களால் முடிந்தளவு உங்களது பிள்ளைகளின் கல்விக்கான பொருளாதாரச் செலவை இந்தத் திட்டத்தின் மூலம் முடிந்தளவு குறைத்துள்ளோம் என்று குறிப்பிட்டார்.

தில்லையடி தேசிய மக்கள் சக்தி தலைவர் எம்.ஷாபிஈன் உரையாற்றுகையில்,

உண்மையில் இந்தத் திட்டம் வரவேற்கத்தக்கது. கல்வியை வறுமையின் காரணமாக இடையில் கைவிடக்கூடாது. அவ்வாறு நிகழுமாயின் முழு சமூகத்தினரும் குற்றவாளிகளே. தற்போதைய அரசும் கல்விக்கு முன்னுரிமை அளித்துள்ளது. எனவே இந்தச் சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் செயற்குழு உறுப்பினர்களான எம்.எல்.எம்.நபாயிஸ், ஆர். ஜைனுஸ், எம்.பீ.எம். சப்ராஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.




EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA





# ரண்விமன வீடுகள் கையளிக்கும் நிகழ்வு அட்டாளைச்சேனையில்!

(நவாஸ் முகம்மட்)

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 2024 ஆம் ஆண்டுக்கான ரண்விமன வீடமைப்பு திட்டத்தின் கீழ் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் பயனாளிகளுக்கு வீடுகள் கையளிக்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பீ ரீ எம்.இர்பான் தலைமையில் இடம்பெற்றது.

இவ் வீடுகள் அட்டாளைச்சேனை சம்பு நகர், பாலமுனை ஆகிய கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்குக் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் ஏ. எம்.ஹமீட், முகாமையாளர் ரீ. பரமானந்தம், வலய முகாமையாளர்கள், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பிரிவு சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




# கண்டக்குழி பாடசாலைக்கு ஒலி பெருக்கி சாதனங்கள்

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

கண்டக்குழி முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் 2002 ஆம் ஆண்டு சாதாரண தர வகுப்பு பழைய மாணவர்களால் பாடசாலையின் நீண்ட நாள் தேவையாக காணப்பட்ட ஒலி பெருக்கி சாதனங்கள் பாடசாலையின் அதிபர் எம்.பீ.எம் ஜஸீமிடம் கையளிக்கப்பட்டன.

பாடசாலையின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் முன்னிலையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர் எம். என். எம். அஸ்மிர், உதவி அதிபர் எம். ஜுனைத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பாடசாலையின் எதிர்கால கல்வி வளர்ச்சிக்கான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கும் மற்றும் ஏனைய சகல பழைய மாணவர்களையும் ஒன்றிணைத்து முன்னேற்ற பாதையில் பாடசாலையை கொண்டு செல்வதற்கான திட்டமிடல்களை மேற்கொண்டுள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன் முதற்கட்டமாகவே பாடசாலையின் முக்கிய தேவையாகக் காணப்பட்ட ஒலி பெருக்கி சாதனங்கள் தொகுதி ஒன்றை வழங்கப்பட்டுள்ளன.

சகல பழைய மாணவர்களுக்குமான ஒரு முன்மாதிரிச் செயற்பாட்டை நிறைவேற்றியுள்ள 2002 சாதாரண தர பழைய மாணவர்களுக்கு பாடசாலையின் நிர்வாகம் சார்பாக நன்றிகளையும் வாழ்த்துக்களையும் அதிபர் எம்.பீ.எம். ஜஸீம் தெரிவித்துள்ளார்.





# பெண்களின் உற்பத்தி பொருள் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கல் நிகழ்வும் ஆலங்குடாவில்!

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

கற்பிட்டி ஆலங்குடா மரவஞ்சேனை ஒன்றிணைந்த கிராம அபிவிருத்தி அமைப்பின் ஏற்பாட்டில் வடமேல் கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் பங்களிப்புடன் ஒரு வருட சுய தொழில் பயிற்சி சான்றிதழ் வழங்கலும் பெண்களின் உற்பத்தி பொருள்கள் விற்பனை கண்காட்சியும் ஆலங்குடா மரவஞ்சேனையில் கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.ஜீ. எஸ்.ஏ. அபே றுவான் தலைமையில் இடம்பெற்றன.

ஆலங்குடா மரவஞ்சேனை ஒன்றிணைந்த கிராம அபிவிருத்தி அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த ஒரு வருட காலமாக இடம்பெற்ற தையல், கேக் , பாபீஸ். நுளம்பு வலை , மலர் அலங்காரம் என 18 வகையான பயிற்சி நெறி களை வெற்றிகரமாக பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டன. பெண்களின் உற்பத்தி பொருள் கண்காட்சியும் இடம்பெற்றது.



இந்த நிகழ்வுக்கு அமைப்பின் தலைவர் எம்.எஸ். றமீஸின் அழைப்பின் பெயரில் வடமேல் மாகாண கிராம அபிவிருத்தி அலுவலக அதிகாரிகள், புத்தளம் மாவட்ட அலுவலக அதிகாரிகள் , கற்பிட்டி பிரதேச செயலக அலுவலக உத்தியோகத்தர்கள் , வேர்ல்ட் விஷன் நிறுவனத்தின் கற்பிட்டி பிராந்திய திட்ட முகாமையாளர் சுபுன், செடோ ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஏ.ஆர் முனாஸ், மற்றும் பயிற்சி ஆசிரியர் என பலரும் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பில் மகளிர் தின நிகழ்வு ஆரம்பித்து வைப்பு!

(பழுவூரான்)

சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளீதரனின் ஆலோசனைக்கமைய உதவி மாவட்டச் செயலாளர் த.பிரண வனின் வழிகாட்டுதலின் கீழ் மாவட்ட அபிவிருத்தி இணைப்பாளர்திருமதிஅரு ணாளினி சந்திரசேகரத்தின் இணைப் பாக்கத்தில்ஏனைய நிறுவன நிறுவன அனுசரணையில் மாவட்ட அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகத்தில் ஞாயிற் றுக்கிழமை (02) மகளிர் தின வார நிகழ்வு வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.



இந்நிகழ்வு “பெண் தொழில் முயற்சி யாளர்கள் மூலம் நாட்டைக் கட்டியெழுப் புவோம்” எனும் தொனிப் பொருளில் தேசிய பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்காக சிறு தொழில் முயற்சியில் ஈடுபடும் பெண்க ளின் தொழில் முயற்சியாண்மை மற்றும் அறிவு, திறன், மனப்பாங்கை விருத்தி செய்யும் வகையில் அமைந்திருந் தது.

இந்த நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு இணைப்பாளர் திருமதி நிசா றியாஸ், pisd நிறுவன இணைப்பாளர் பாகிம், மாவட்டப் பெண்கள் அதிகார சபை உறுப்பினர்கள் மற்றும் சிறுதொழில் முயற்சியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# புத்தளம் பள்ளிவாசல்களுக்கு நோன்புக் கஞ்சிக்கு அரிசி பங்கீடு

(நூருல் ஹுதா உமர்)

பி.சி.எம்.எச். நிறுவன பணிப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தொழிலதிபர் அலி சப்ரி ரஹீமால் வழமை போன்று நோன்பாளிகள் நோன்பு திறக்கும் போது அருந்தும் கஞ்சிக்கான அரிசி வழங்குவது வழமை. அதேபோல் இம்முறை ஞாயிற்றுக்கிழமை (02) அலி சப்ரி ரஹீமின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

அரிசிக்காக விண்ணப்பித்திருந்த 100 பள்ளிவாசல்களுக்கு முதற்கட்டமாக தலா 50 கிலோ அரிசி கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகர கிளை தலைவர் அஷ்ஷைக் பீ.எம். ஜிஃப்னாஸ் உட்பட உறுப்பினர்கள், புத்தளம் பெரிய பள்ளிவாசல் தலைவரும் ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகருமான எம்.நிஜாம், அஷ்ஷைக் எம்.இசட்.எம்.சவ்கி ஆகியோரின் பங்களிப்புடன் நடைபெற்றது.

புத்தளம் பந்து கழக உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் என பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# ஆலங்குடா கடற்பரப்பில் சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட மஞ்சள், காலணிகள்!

## *சந்தேக நபர்கள் இருவர் கைது!!*

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

நுரைச்சோலை ஆலங்குடா கடற்பரப்பில் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட அதிரடி தேடுதல் நடவடிக்கையின் போது தீவுக்குள் சட்ட விரோதமாக கடத்த முயன்ற சுமார் 496 கிலோ கிராம் உலர் மஞ்சள் மற்றும் 515 சோடி காலணிகள் கைப்பற்றப்பட்டன.

இந்த நடவடிக்கையின் போது டிங்கி படகு ஒன்றுடன் 02 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமான பொருள்களின் ஊடுருவலைத் தடுப்பதற்காக தீவின் கரையோரப் பகுதிகளில் ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தபோதே குறித்த பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

வடமேற்கு கடற்படை கட்டளையின் இலங்கை விஜயா கடற்படையின் மூலம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்கையின்போது 515 சோடி செருப்புகள் 16 உறைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. சுமார் 496 கிலோ எடையுள்ள உலர் இஞ்சி 06 பொதிகளில் மறைக்கப்பட்டிருந்தது என்று தெரிவித்துள்ளனர்.

இந்த நடவடிக்கையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 33 மற்றும் 46 வயதுடைய கற்பிட்டியில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். 02 சந்தேக நபர்களும் கைப்பற்றப்பட்ட பொருள்களுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்கத்தடுப்பு அலுவலகத்தில் ஒப்படைக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.









# புத்தளம் கனமூலை வித்தியாலயத்தின் பிரதான நுழைவாயில் திறந்து வைப்பு

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

புத்தளம் கனமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பிரதான நுழைவாயில் திறப்பு விழா வெள்ளிக்கிழமை (28) பாடசாலையின் அதிபர் பீ.எம்.எம் முஸ்னி தலைமையில் இடம்பெற்றது.

பாடசாலையின் பிரதான நுழைவாயில் முன்னாள் அதிபர் எஸ்.எம். ஹனீபாவின் வேண்டுகோளுக்கு இணங்கத் தற்போதைய அதிபர் பீ.எம்.எம். முஸ்னியின் வழிகாட்டலில் மர்ஹூம் எஸ். கதிர்மரிக்காரின் ஞாபகார்த்தமாக அன்னாரின் குடும்பத்தினரால் நிர்மாணிக்கப்பட்டு அவரது புதல்வரான முன்னாள் கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் கே.எம்.எம். பைசல் மரிக்காரால் திறந்து வைக்கப்பட்டது .



இந்தத் திறப்பு விழாவில் புத்தளம் தெற்கு கோட்டக் கல்வி பணிப்பாளர் எம்.ஐ. நௌஸாத், பாடசாலையின் முன்னாள் ஓய்வு பெற்ற அதிபர் எஸ்.எம்.எம். ஹனிபா ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவ மாணவிகள் சங்க உறுப்பினர்கள் என சகலரதும் பங்களிப்புடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பைசர் மரைக்காரின் இந்தச் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் முகமாக பாடசாலை சமூகத்தினரால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.

# சம்மாந்துறையில் சட்டவிரோத செயற்பாடு அதிகரிப்பு மக்களை விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்து

(பாறுக் ஷிஹான்)

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் அண்மைக் காலமாக வீடுகள் உடைக்கப்பட்டு திருடுதல் உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. அவற்றைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தற்போது ஆரம்பித்துள்ள ரமழான் நோன்பு காலத்திலும் இரவு வேளையில் இறைவணக்க வழிபாட்டுக்கு ஆண்கள் பெண்கள் பள்ளிவாசலுக்கு செல்ல வேண்டியுள்ளதனால் அதனை பயன்படுத்தித் திருடர்கள் வீடுகளை உடைத்து திருடும் நிலைமை தொடர்கதையாகவே உள்ளது.


எனவே பொது மக்கள் இவ்வாறான சந்தர்ப்பங்களை மிக சாதுரியமாக கையாண்டு பாதுகாப்பை உறுதிப்படுத்தி செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

வீடு உடைப்பு மற்றும் சட்டவிரோத களவு பொதுமக்களின் கவனயீனத்தால் இடம்பெற்றுள்ளன.

அத்துடன் கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசார் நெறிப்படுத்தலில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி



கே.டி.எஸ் ஜெயலத்தின் வழிகாட்டுதலில் வீதி ரோந்து நடவடிக்கைகள் மற்றும் திடீர் சோதனை நடவடிக்கைகள் என்பன பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டு சந்தேக நபர்கள் சிலர் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டும் உள்ளனர். எனவே இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளை தடுப்பதற்கு பொலிஸார் பொதுமக்களின் உதவியைக் கோரியுள்ளனர்.






# விநியோகிக்கப்படாமல் தேங்கும் கடிதங்கள்; ஹொலிரூட் தோட்ட மக்கள் பெரும் பாதிப்பு!

## உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(தலவாக்கலை பி.கேதீஸ்)

ஹேலீஸ் பெருந்தோட்ட கம்பனியின் கீழ் இயங்கும் தலவாக்கலை ஹொலிரூட் தோட்ட ஈஸ்ட் பிரிவு மக்களுக்கு வரும் கடிதங்கள் விநியோகிக்கப்படாமல் பெரட்டுக் களத்திலேயே தேங்கிக் காணப்படுகின்றன என்று அத்தோட்டத் மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். இதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக தெரியவந்துள்ள தாவது,

தலவாக்கலை பிரதான தபால் அலுவலகத்துக்கு வரும் கடிதங்கள் ஹொலிரூட் தோட்ட அலுவலகத்துக்குத் தலவாக்கலை பிரதான தபால் அலுவலகம் ஊடாக அனுப்பப்படுகின்றன.

இங்கு ஹொலிரூட் தோட்ட பிரிவுகளான ஹொலிரூட் ஈஸ்ட், ஹொலிரூட் மேல்பிரிவு, ஹொலிரூட் கீழ்பிரிவு, ஹொலிரூட் ரத் மற்றும் ஹொலிரூட் 18 ஆகிய பிரிவுகளுக்கு தோட்ட அலுவலகம் ஊடாக பிரித்து பிரட்டுகளங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

இந்த நிலையில் இந்தக் கடிதங்களை தோட்ட உத்தியோகத்தர்கள் தொழிலாளர்களுக்கு வழங்குவதில்லை என தொழிலாளர்கள் கவலை வெளியிடுகின்றனர்.

ஹொலிரூட் தோட்டத்துக்கு வரும் பதிவுத் தபால்கள் மாத்திரம் தலவாக்கலை பிரதான தபால் அலுவலகங்களில் இருந்து விநியோகிக்கப்படுகின்றன என்றும் ஏனைய கடிதங்கள் அனைத்தும் தோட்ட அலுவலகத்துக்கே அனுப்பப்படுகின்றன எனவும் தொழிலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

தரம் ஒன்றுக்கு மாணவர்களை பாடசாலைகளில் அனுமதிப்பதற்காக அனுப்பப்பட்ட கடிதங்கள், அடகு வைத்த நகைகளுக்கு வங்கிகள் ஊடாக அனுப்பப்பட்ட கடிதங்கள், தொழில் வாய்ப்புகளை பெற விண்ணப்பித்த இளைஞர் யுவதிகளுக்கு அனுப்பப்பட்ட நேர்முகத் தேர்வுகளுக்கான கடிதங்கள், கடன் சம்பந்தமாக வங்கிகளூடாக அனுப்பப்பட்ட கடிதங்கள், தொழிலாளர்களுக்கு ஊழியர் சேமநிதி தொடர்பாக இலங்கை மத்திய வங்கியூடாக அனுப்பப்பட்ட கடிதங்கள் உட்பட இன்னும் பல கடிதங்கள் அத்தோட்ட பெரட்டுக் களத்திலேயே மக்களுக்கு விநியோகிக்காமல் தேங்கி கிடக்கின்றன.

இதனால் இந்தப் பிரதேச மக்கள் பல்வேறு அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர்.

எனவே பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சுகாதார விழிப்புணர்வு நிகழ்வு!

(எம். எப். நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரிவில் இயங்கி வரும் முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களுக்கு சுகாதார மேம்பாடு தொடர்பான ஆலோசனை வழிகாட்டி விழிப்புணர்வு நிகழ்வு அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நேற்று (3) இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.எம். கஸ்பியா அட்டாளைச்சேனை பிரிவுக்கு உட்பட்ட முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பொறுப்பதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இதன்போது, முன்பள்ளி பாடசாலை எவ்வாறு அமைய வேண்டும், அந்தப் பாடசாலையில் எவ்வாறான விடயங்களை உள்ளடங்க வேண்டும் என்ற விழிப்புணர்வுத் தகவல்களை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸடீன் வழங்கினார்.

சிறுவர்களுக்கான பாதுகாப்பு, அவர்களுக்குத் தேவையான வசதி வாய்ப்புகள் போன்றவற்றை எவ்வாறு செய்து கொடுக்க வேண்டும் என்றும், போசாக்கு மற்றும் உணவு பழக்க வழக்கங்களை மேம்படுத்தல் தொடர்பாகவும் அவர் தெளிவுப்படுத்தினார்.







# குர்திஷ் போராளிகளின் போர்நிறுத்தம்; துருக்கியில் 40 ஆண்டுகால போராட்ட முடிவு?

**● ஐங்கரன் விக்கினேஸ்வரா.**

*துருக்கியில் நாற்பது ஆண்டுகால தனிநாட்டு போராட்டத்தில் ஈடுபட்ட குர்திஷ் போராளிகள் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளனர். நீண்ட காலமாக தங்கள் இன அடையாளத்தைத் தக்கவைக்க குர்திஷ் மக்கள் போராடினர். ஆனால் அவர்களை எல்லை தாண்டியும் அழித்தொழிக்கத் துடித்தது துருக்கி.)*

தனிநாடு கோரி போராடும் குர்திஷ் போராளிகள் அமைப்பான பி.கே.கே-க்கும் துருக்கிக்கும் இடையிலான மோதல் 1984 இல் தொடங்கியது. இந்த மோதல் பல்லாயிரக்கணக்கான இறப்புகளுக்கு வழிவகுத்தது.

கடந்த வாரம் குர்திஷ் அரசியல் குழு, பி.கே.கே. அமைப்பு தனது ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு கலைந்து செல்லுமாறு சிறையில் இருந்து குர்திஷ் போராளித் தலைவர் அப்துல்லா ஓஜலான் அழைப்பை விடுத்தார்.

**எல்லை தாண்டி அழித்த துருக்கி**

நீண்ட காலமாக தங்கள் இன அடையாளத்தைத் தக்கவைக்க குர்திஷ் மக்கள் போராடினர். ஆனால் அவர்களை எல்லை தாண்டியும் அழித்தொழிக்கத் துடித்தது துருக்கி.

சிரியாவில் கடந்த ஆண்டு இறுதியில் குர்திஷ் போராளிகளுக்கு எதிராக தரை வழியாகவும், வான் வழியாகவும் துருக்கி ராணுவம் தாக்குதல் நடத்தியதால் பாரிய அழிவை அவர்கள் சந்தித்தனர்.

நாற்பது ஆண்டுகால கிளர்ச்சியை நடத்தி வரும் குர்திஷ் போராளிகள், தங்கள் சிறையில் அடைக்கப்பட்ட தலைவரால் போராட்ட அமைப்பை நிராயுதபாணியாக்க அழைப்பு விடுத்தார்.

இரண்டு நாள்களுக்குப் பிறகு சனிக்கிழமை குர்திஷ் போராளிகள் போர் நிறுத்தத்தை அறிவித்தனர். குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி அல்லது பி.கே. கேயின் போர் நிறுத்த அறிக்கையை அக்குழுவுக்கு நெருக்கமான ஊடக நிறுவனமான ஃபிரத் செய்தி நிறுவனம் வெளியிட்டது.

1999 முதல் துருக்கியால் சிறையில் அடைக்கப் பட்டுள்ள அப்துல்லா ஓஜலனைப் பற்றி குறிப்பிடுகையில், அந்தக் குழு, "தலைவர் அப்துல்லா ஓஜலான் அமைதி மற்றும் ஜனநாயக சமூகத்திற்கான அழைப்பை செயல்படுத்துவதற்கு வழி வகுக்கும் வகையில் இன்று முதல் போர்நிறுத்தம் அமலுக்கு வருவதாக அறிவித்துள்ளார்.

துருக்கியால் தாக்கப்படாவிட்டால் எங்கள் படைகள்



எதுவும் ஆயுதமேந்திய நடவடிக்கை எடுக்காது" என்று தெரிவித்துள்ளது.

2015 கோடையில் பி.கே.கே. மற்றும் துருக்கி படைகள் இடையேயான அமைதிப் பேச்சுவார்த்தைகள் முறிந்ததிலிருந்து, அமைதிக்கான முதல் அறிகுறியாக இந்த போர் நிறுத்தம் உள்ளது.

குர்திஷ்தான் மற்றும் மத்திய கிழக்கில் ஒரு புதிய வரலாற்று செயல்முறை தொடங்கியுள்ளது என்பதை ஓஜலனின் அறிக்கை சுட்டிக்காட்டுவதாக பி.கே.கே. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

**குர்திஷ்தான் பூர்வீக தாயகம்**

குர்திஷ்தான் என்பது துருக்கி, ஈராக், சிரியா மற்றும் ஈரானின் குர்துகள் வசிக்கும் பகுதிகளைக் குறிக்கிறது. பி.கே.கேயின் தலைவர் அப்துல்லா ஓஜலான், 1999 இல் இருந்து சிறையில் இருக்கிறார். எனினும் குர்திஸ் அமைப்பு தொடர்ந்து போராடி வருகிறது. பல அமைதி ஒப்பந்தங்கள் பயனற்றுப் போன நிலையில், சிறையில் இருக்கும் அப்துல்லாவை சமீபத்தில் துருக்கி அரசியல் தலைவர்கள் சந்தித்து, வன்முறையை கைவிடும்படி கோரினர்.

இந்த நிலையில், ஆயுதங்களை கைவிடுவதாக குர்திஷ் பி.கே.கே. அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

குர்திஷ் அமைப்பைச் சேர்ந்த யாரும் ஆயுதத் தாக்குதலில் ஈடுபட மாட்டார்கள். துருக்கி, ஈராக், ஈரான், சிரியாவை உள்ளடக்கிய குர்திஷ் பிராந்தியம் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் புதிய வரலாறு எழுதப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

துருக்கியில் ஜனாதிபதி எர்டோகன் பதவிக்காலம் 2028 இல் முடிகிறது. அதன் பிறகும் பதவியில் தொடரும் வகையில் சட்டத்தை திருத்த குர்திஷ் ஆதரவு தேவைப்படுவதால், அவரது முயற்சியில் இந்த போர் நிறுத்த முடிவு எடுக்கப்பட்டது என்று தெரிகிறது.

**தொடர்ச்சி▼**



# குர்திஷ் போராளிகளின் போர்நிறுத்தம்; துருக்கியில் 40 ஆண்டுகால போராட்ட முடிவு?

தொடர்ச்சி▲

அத்துடன் சிரியாவில் அதிபராக இருந்த பஷிர் ஆசாத்தின் ஆட்சி கவிழ்ப்பு, லெபனானில் ஹெஸ்பெல்லா அமைப்பு பலவீனமானது போன்ற காரணங்களும், குர்திஷ் போராளிகளின் போர் நிறுத்த முடிவுக்குக் காரணமாகக் கூறப்படுகிறது.

**காவு வாங்கப்படும் கனவு தேசம்**

சிரியாவில் பஷிர் ஆசாத் ஆட்சி வீழ்ச்சியின் பின்னர், குர்திஷ் மக்கள் தம் வசமுள்ள சுயாட்சி அதிகார பிரதேசத்தை பாதுகாக்க முயல்கின்றனர். ஆனால் அங்கும் துருக்கியின் ஆக்கிரமிப்பு தொடருமானால், குர்திஷ்தான் மக்களின் நாடு காவு வாங்கப்படும் கனவு தேசமாகவே மாறும்.

ஈராக், ஈரான், சிரியா, துருக்கி நாடுகளுக்குள் ஆயிரம் பகைமை போட்டியிருந்தாலும், குர்திஷ்தான் என்கிற ஒரு அரசு உருவாகிவிடக் கூடாது என்பதில் இந்த நாடுகள் ஒத்த கருத்தைக் கொண்டிருக்கின்றன என்பது உண்மை தான்.

**தாயகம் இல்லாத குர்திஷ் மக்கள்**

மத்திய கிழக்கில் பாரம்பரியமாகவே வாழ்ந்து வரும் இனமான குர்திஷ் மக்கள் தென்கிழக்கு துருக்கி, வட கிழக்கு சிரியா, வட ஈராக், வடமேற்கு ஈரான், தென்மேற்கு ஆர்மேனியா ஆகிய பகுதிகளில் அதிகம் வாழ்கின்றனர்.

ஆயினும் தாயகம் இல்லாத மிகப்பெரிய இனக் குழுவான குர்திஷ் மக்கள் துருக்கியிலும், சிரியாவிலும் பிற இடங்களிலும் நீண்டகாலமாக துன்புறுத்தலை எதிர்கொண்டுள்ளனர்.

ஐந்து நாடுகளில் சிதறி வாழும் குர்திஷ் மக்களின், பேரிடியாக ஐந்து நாடுகளிலுமே அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்ட இனமாக கருதப்படுகின்றனர். இதன் விளைவாக விடுதலை போராட்டத்துக்குத் தள்ளப்பட்டார்கள்.

ஈராக், ஈரான், சிரியா, துருக்கி நாடுகளுக்குள் ஆயிரம் பகைமை போட்டியிருந்தாலும், குர்திஷ்தான் என்கிற ஒரு அரசு உருவாகிவிடக் கூடாது என்பதில் இந்த நாடுகள் ஒத்த கருத்தைக் கொண்டிருக்கின்றன என்பது உண்மைதான்.

2011 இல் சிரியாவின் உள்நாட்டுப் போர் வெடித்த பின்னர், நவம்பர் 2013 இல் குர்திஷ் படைகள் வடகிழக்கு சிரியாவின் சில பகுதிகளில் சுயாட்சியை அறிவித்தன. அங்கு அவர்கள் பெரும்பான்மையாக உள்ளனர். சுமார் 30 மில்லியன் குர்திஷ் மக்கள் வடக்கு ஈராக், மேற்கு ஈரான், வடக்கு சிரியாவில் பரவி உள்ளனர். மேலும் துருக்கியின் மக்கள் தொகையில் சுமார் 18 வீதம் பேர் உள்ளனர்.

**ஐந்து நாடுகளில் சிதறிய குர்திஷ்தான்**

குர்திஷ்தான் தாயகமானது ஈராக், ஈரான், சிரியா, துருக்கி, ஆர்மேனிய நாடுகளுக்குள் ஒவ்வொன்றுடனும் இணைந்தவாறு, அந்தந்த நாடுகளின் எல்லைப் பகுதிகளிலேயே அமைந்திருக்கின்றன. குர்திஷ் மக்கள் வாழும் இந்த மலைப் பகுதிகளை இணைத்து 'குர்திஷ்தான்' எனும் தனிநாடு காண விரும்புகிறார்கள்.

முதலாம் உலகப் போருக்குப் பின்னர் ஓட்டோமான் சாம்ராஜ்யம் வீழ்ந்ததை அடுத்து நடைபெற்ற 'வெர்சாய்ஸ்' சமாதான மாநாட்டில் குர்திஷ்தான் கோரிக்கை முதலில் முன்மொழியப்பட்டது.

இதையடுத்து, முதலாம் உலகப் போரில் வெற்றிபெற்ற மேற்கத்திய கூட்டுப்படையினர் சுவிட்சர்லாந்தில் கூடி, 'செவ்ரெஸ் ஒப்பந்தம்' கொண்டுவந்தனர். 1920 இல் கொண்டுவரப்பட்ட அந்த ஒப்பந்தத்தில், ஐந்து நாடுகளிலும் உள்ள பகுதிகளை சேர்க்காமல், துருக்கியில் மட்டும் உள்ள பகுதியில் 'குர்திஷ் தேசம்' ஒன்று உருவாக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், 1923 ஆம் ஆண்டில் அமெரிக்கா, பிரிட்டன் நாடுகளுடன் கையெழுத்தான 'லாவ் சன்னே' ஒப்பந்தத்தின்படி நவீன துருக்கியின் எல்லைகள் வரையறுக்கப்பட்ட போது குர்திஷ் தேசம் உருவாக்கப்படவில்லை என்பது வரலாற்றின் மறைக்கப்பட்ட பக்கங்களாகும்.

ஆனால், தற்போது குர்திஷ் பி.கே.கே. அமைப்பின் அரசியல் குழுவானது ஆயுதங்களை கீழே போட்டுவிட்டுக் கலைந்து செல்லுமாறு சிறையில் இருந்து குர்திஷ் போராளித் தலைவர் அப்துல்லா ஓஜலான் அழைப்பை விடுத்தமை உள்நோக்கம் கொண்டதாக அறியப்படுகிறது.

ஐந்து நாடுகளில் சிதறிக் கிடக்கும் குர்திஷ் மக்களின் தாயகக் கனவு நனவாகாமல், கலைந்த கனவாக மாறிடுமோ என்ற அச்சமும் எழுந்துள்ளது.




# தென்கிழக்கு பல்கலைக்கழகம் நடத்திய போட்டியில் கல்முனை பற்றிமா முதலிடம்!

( வி.ரி.சகாதேவராஜா)

தென்கிழக்கு பல்கலைகழகத்தால் நடத்தப்பட்ட கிழக்கு மாகாண பாட சாலைகளுக்கு இடையிலான நிதியியல் வினாவிடை போட்டியில் கிழக்கில் புகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி முதலிடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளது.

கல்லூரியைச் சேர்ந்த வர்த்தகப் பிரிவு மாணவர்களாகிய ஏ.சி.அன்ரோலினா, ஏ.ஜிரோன்ஸி, எஸ்.ஸ்ருதி, பி.கர்ஷனா ஆகியோர் கார்மேலியன் அணி எனும் நாமத்துடன் கலந்து கொண்டு வெற்றிவாகை சூடினர்.

இந்தப் போட்டியில் கிழக்கு மாகாணத்



தைச் சேர்ந்த பிரபல்யமான 30 பாட சாலைகள் பங்குபற்றின. இந்தப் போட்டியானது ஆரம்பச்சுற்று, இறுதிச்சுற்று என இரு சுற்றுக்களைக்கொண்டிருந்தது.

இந்த இரு சுற்றுக்களிலும் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி மாணவர்கள் முதலாவது இடத்தை பெற்று வெற்றியாளராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக பீடாதிபதி மற்றும் பேராசிரியர் குழு 25 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வெற்றிச் சான்றிதழும் வழங்கிக் கௌரவித்தனர்.

இந்தப் போட்டிக்காக மாணவர்களைத் தயார்படுத்திய வர்த்தக துறை ஆசிரியர்களான திருமதி திருமதி நளினி மோகனகுமார் மற்றும் யுவராணி அலோசியஸ் மற்றும் வெற்றி பெற்ற மாணவர்களுக் கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ரெஜினோல்ட் பாராட்டுகளைத் தெரிவித்தார்.







# சுற்றாடல் கழக முன்னோடி மாணவியால் வீட்டுத் தோட்ட செய்கையாளருக்கு பயிர்!

(ஏ.எச்.எம்.ஹாரீஸ், மத்திய முகாம்)

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையின் சுற்றாடல் கழக முன்னோடி மாணவி ஜே.சதுஷயன்யா 2016 ஆம் ஆண்டு தொடக்கம் சுற்றுச் சூழல் தொடர்பாக பச்சை, மஞ்சள், வெள்ளி, தங்க பதக்க செயற்பாடுகளில் ஈடுபட்ட இவர் தற்போது ஜனாதிபதி பதக்க செயற்பாடுகளின் பொருட்டு தனியாள் கருத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்.

இதற்கமைய கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பாண்டிருப்பு 01 பி கிராம உத்தியோகத்தர் பிரிவில் வீட்டுத் தோட்டத்தில் ஈடுபடுபவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவை உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் அவர்களை இனம்கண்டு அவர்களுக்கான பயிர் கன்றுகள் மற்றும் விதைகளை வழங்கி வருகின்றார்.

இதன்போது முதற்கட்டமாக அந்தப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 10 குடும்பங்களுக்கு மரக்கறி பயிர் கன்றுகள், பழமரக் கன்றுகள் மற்றும் விதைகள் என்பன வழங்கப்பட்டன.

இந்தக் குடும்பங்களுக்கு வீட்டுத் தோட்ட செய்கை தொடர்பாக அம்பாறை மாவட்ட சிரேஷ்ட விவசாய போதனாசிரியர் கோகுலராஜ் வளவாளராக கலந்து விளக்கமளித்தார். இந்த மாணவியால் வீட்டுத் தோட்ட செய்கை தொடர்பான



கையேடும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ், அம்பாறை மாவட்ட சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர் புஸ்பராஜினி உள்ளிட்ட விவசாய திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இரவது சுற்றாடல் முன்னோடிக் கழகச் செயற்பாடுகளுக்குப் பெற்றோர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

# தேசிய பொருளாதாரத்தில் அக்கறை காட்டும் புதிய அரசில் பனை வளத்தை மேம்படுத்தலாம்!

## முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கமலாகரன் நம்பிக்கை



(த.சுபேசன்)

தேசிய பொருளாதாரத்தை மீட்டெடுக்க அதிக அக்கறை காட்டிவரும் புதிய அரசில் பனை வளத்தை மேம்படுத்த முடியும் என்ற நம்பிக்கை காணப்படுகிறது என்று வடக்கு - கிழக்கு இணைந்த முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினருமான நடராஜா கமலாகரன் தெரிவித்துள்ளார்.

பனை அபிவிருத்திச் சபையின் புதிய பணிப்பாளர் சபை உறுப்பினரில் ஒருவராக அண்மையில் தெரிவான நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

எனது தந்தையார் நடராஜா 12 வருடங்களாகப் பனை அபிவிருத்திச் சபைத் தலைவராகப் பதவி வகித்தார்.

அவருடைய காலத்தில் தான் பனை சார்ந்த உற்பத்திகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஆரம்பிக்கப்பட்டது.

அப்போது நான் 1984-1986 காலப் பகுதியில் பனை அபிவிருத்திச் சபைத் தலைவரின் பிரத்தியேக உதவியாளராகப் பணி புரிந்த அனுபவம் உள்ளது.

நான் பணி புரிந்த காலத்தில் பனம் பொருள் உற்பத்தி சார்ந்த பயிற்சிகள், ஆராய்ச்சிகளை முன்னெடுத்திருந்தேன்.

எதிர்காலத்தில் பனம் தொழிலை சமூகம் சார்ந்த தொழிலாக அல்லாமல் அறுவடை சார்ந்த தொழிலாகப் பார்க்க வேண்டும்.

தேயிலை,இறப்பர், தென்னை போன்று தமிழ் சமூகத்தின் பொருளாதார வரமாக பனை மரம் காணப்படுகின்றது.

புதிய அரசு தேசிய பொருளாதாரத்தில் அதிக அக்கறை காட்டுவதால் பனம் பொருளாதாரத்தை இந்தக் காலகட்டத்தில் வெகுவாக உயர்த்திக் கொள்ள முடியும்.

முன்னைய ஆட்சிக் காலத்தில் பனம் தொழிற்துறை ஊடான வருமானம் ஒரு சிலரால் தவறாக பயன்படுத்தப்பட்டு ஊழலுக்கு இடமளிக்கப்பட்டு விட்டது.

எதிர்காலத்தில் ஊழல்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருக்காது.

பனை அபிவிருத்திச்சபையின் தலைவராக தமிழரான சகாதேவன் உள்ளார்.அவருக்கு துறை சார்ந்து நல்ல அனுபவம் ஆற்றல் உள்ளது. அத்துடன் பணிப்பாளர் சபையிலும் இருவர் பேராசிரியர்களாக உள்ளமை கூடுதல் சிறப்பாக உள்ளது.

புதிய பணிப்பாளர் சபை, பனை அபிவிருத்திச் சபைக்குச் சிறந்த வழிகாட்டியாக அமையும். புதிய நியமனங்கள் மற்றும் இடமாற்றம் உள்ளிட்ட முக்கிய விடயங்களில் பணிப்பாளர் சபை நடுநிலைமையாகப் பணியாற்றும்.- என்றார்.

# அசமந்த நிலையில் கிழக்கு மாகாண சபை; புதிய அரசு வந்தும் இதே நிலைமைதான்!

## இம்ரான் எம்.பி. குற்றச்சாட்டு!!

( அபு அலா, எஸ்.எம்.முபீன்)

புதிய அரசின் காலத்திலும் பொது மக்களுக்குச் சேவை வழங்குவதில் கிழக்கு மாகாண சபை அசமந்த நிலையிலேயே பயணித்து வருகின்றது என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள அவர் மேலும் கூறியுள்ளதாவது,

கிழக்கு மாகாண சபை அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுக்குப் பொது மக்களால் அனுப்பப்படும் கடிதங்களில் பெரும்பாலானவற்றுக்கு பதில் அனுப்பப்படுவதில்லை. அவற்றுக்கான நடவடிக்கைகளும் கூட வாரக் கணக்கில் மாதக் கணக்கில் எனத் தாமதப்படுத்தப்படுகின்றன. சில விடயங்கள் எவ்வித நடவடிக்கையும் இன்றிக் கிடப்பில் போடப்படுகின்றன.

கடந்த அரசின் காலத்தில் கிழக்கு மாகாண சபை எப்படிச் செயற்பட்டதோ அதே பாணியிலேயே இன்றும் பயணிக்கிறது. இந்த அரசு அரச சேவையை வினைத்திறனுள்ள தாக்குவோம் பொது மக்களுக்குப் பயனுள்ளதாக்குவோம் என்று பேசிக் கொண்டாலும் எந்த மாற்றத்தையும் கிழக்கு மாகாண சபையில் அவதானிக்க முடியவில்லை.

மக்கள் பிரதிநிதியாகிய நான் கிழக்கு மாகாணசபை அமைச்சுக்கள், திணைக்களங்களுக்குப் பொது மக்களது பிரச்சினைகள் தொடர்பாக கடிதங்கள் அனுப்பியுள்ளேன்.

சில அலுவலகங்களுக்கு நேரில் சென்று விளக்கமளித்துக் கடிதங்கள் கையளித்துள்ளேன். எனது கடிதங்களுக்கே பதில் கிடைப்பதில்லை. அப்படியாயின் பொது மக்கள் அனுப்பும் கடிதங்களின் நிலையை எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது.

இதைவிட ஆச்சரியம் என்னவென்றால் கிழக்கு மாகாண ஆளுநருக்குப் பொது மக்கள் முன்வைக்கும் பிரச்சினைகளை அவர் சம்பந்தப்பட்ட அமைச்சு திணைக்களங்களுக்கு நடவடிக்கைக்காக அனுப்புகிறார். அவை கூடக் கிடப்பில் போடப்படுகின்றன.

நான் ஆளுநரது கவனத்துக்குச் சில விடயங்களை முன்வைத்தேன். அவர் குறித்த அமைச்சுக்கள் திணைக் களங்களுக்கு அவற்றை முன்னிலைப்படுத்தித் தேவையான நடவடிக்கை எடுத்து இருவாரங்களுக்குள் பதில் அனுப்புமாறு குறிப்பிட்டு கடிதம் அனுப்பியுள்ளார்.



அதன் பிரதி எனக்கும் கிடைத்தது. சுமார் 2 மாதங்களாகியும் அவற்றுக்கான பதில் எனக்கு கிடைக்கவில்லை. உரிய விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுத்ததாகவும் தெரியவில்லை.

ஆளுநரது கடிதத்தையே இந்த அதிகாரிகள் கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் கிழக்கு மாகாண அரச அலுவலகங்களின் நிலையை எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. இது குறித்த நான் மிகவும் கவலையடைகின்றேன்.- என்றார்.



# சம்மாந்துறையில் நோன்பு காலத்தில் நாபீர் பௌண்டேசனின் உலருணவு!

(பாறுக் ஷிஹான்)

வருடாவருடம் நாபீர் பௌண்டேசன் மேற்கொள்ளும் புனித ரம்ழான் நோன்பு காலத்துக்கான உலருணவு விநியோகம் இம்முறை நேற்று திங்கட்கிழமை (03) மாலை சம்மாந்துறை புறநகர் பகுதியில் நாபீர் பௌண்டேசனின் ஸ்தாபகரும் பிரபல சமூக செயற்பாட்டாளரும் ஈ.சி.எம். நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் பொறியியலாளருமான உதுமான்கண்டு நாபீர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வானது பிரதான மார்க்க சொற்பொழிவுடன் கிறாஅத் ஓதப்பட்டு ஆரம்பமானது. நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது நிகழ்வின் ஏற்பாட்டாளர் உதுமான்கண்டு நாபீர் தற்சார்பு பொருளாதாரத்தின் முக்கியத்துவம் குறித்து உரையாற்றினார். சகல மக்களும் நாட்டின் அபிவிருத்திக்காக கைத்தொழில் ஒன்றை மேற்கொள்ளுதல் வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

# முகத்துவாரத்தில் 17 வருடங்களின்பின் ஆரம்பிக்கப்படுகிறது பாலர் பாடசாலை

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

கற்பிட்டி முகத்துவாரத்தின் கிராம உத்தியோகத்தர் எம். பீஎம். அர்ஷதின் அயாராத முயற்சியின் பயனாக கடந்த 17 வருடங்களாகச் செயற்படாது இருந்த - மூடப்பட்டிருந்த பாலர் பாடசாலை நாளை புதன்கிழமை (05) உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

கற்பிட்டி முகத்துவாரம் பாலர் பாடசாலையின் உத்தியோகபூர்வ ஆரம்ப நிகழ்வு முகத்துவாரம் கிராம உத்தியோகத்தர் எம். பீ. எம். அர்ஷதின் ஏற்பாட்டில் கற்பிட்டி பிரதேச செயலாளராக பதில் கடமையாற்றும் பீ.ஜீ.எஸ்.என் பிரியதர்ஷினி தலைமையில் நிர்வாக கிராம உத்தியோகத்தர் பீ.எம்.எம் பைனஸ், பிரதேச செயலகத்தின் கள உத்தியோகத்தர்கள், முகத்துவாரம் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம் ஸாகீர், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், முகத்துவாரம் அரசினர் முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர், முகத்துவாரம் சிங்கள பாலர் பாடசாலையின் ஆசிரியர், முகத்துவாரம் ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் மற்றும் ஊர் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

புதிய பாலர் பாடசாலையின் ஆசிரியராக எம்.ஆர்.எப் நுஸ்ரா கடமையாற்றவுள்ளார்.

# ரயில் விபத்தில் உயிரிழந்த சயந்தன் நினைவாக இணுவில் மத்திய பஸ் நிலையம் புனரமைப்பு!

## இணுவில் இந்து விளையாட்டு கழகம் முன்னெடுப்பு





(எஸ்.நிதர்ஷன்)

ரயில் விபத்தில் சிக்குண்டு உயிரிழந்த இணுவில் இந்து விளையாட்டு கழகத்தின் உறுப்பினர் ஆனந்தராசா சயந்தனின் நினைவாக இணுவில் மத்திய பஸ் நிலையம் புனரமைக்கபட்டு இன்று (04) காலை திறந்து வைக்கப்பட்டது .

கடந்த வருடம் இணுவில் பகுதியில் ரயில் கடவையில் விபத்துக்குள்ளாகி இறந்த ஆனந்தராசா சயந்தனின் நினைவாக இணுவில் இந்து விளையாட்டுக் கழகத்தால் பல்வேறு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், 1958 ஆம் ஆண்டு இணுவில் இந்து விளையாட்டு கழகத்தால் அமைக்கப்பட்ட மத்திய பஸ் நிலையம் தற்போது புனரமைக்கப்பட்டு அவரது நினைவாக திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் விருந்தினர்களாக இணுவில் மத்திய கல்லூரி அதிபர் துரைசிங்கம், இணுவில் தென்னிந்திய திருச்சபை லங்கேஸ்வரன், அருட்தந்தை, மக்லியோட் வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்களான தனகோபி , உதயகுமாரன் , இணுவில் இந்து விளையாட்டு கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




# முஸ்லிம் எய்ட் நிறுவனத்தால் ரம்ழான் உலர் உணவு வழங்கல்

(முகம்மட் இம்றான்)

கிண்ணியா மத்திய கல்லூரி மைதானத்தில் ரம்ழானை முன்னிட்டு ஸகாத் பெற தகுதியான தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கான உலர் உணவுப் பொருள்கள் முஸ்லிம் எய்ட் நிறுவனத்தின் அனுசரனையுடன் நேற்று (03) பிரதேச செயலாளர் எம்.எச் எம். ஹனியால் வழங்கப்பட்டன.

பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் பிரதேச செயலக ஊழியர்களும் கலந்து கொண்டனர். ரம்ழான் மாதத்தில் வருமானம் குறைந்த அனைவரும் நோன்பு நோற்கும் நோக்கில் இந்த உலர் உணவு வழங்கப்பட்டது.



# முத்து நகரில் மக்கள் குடியிருப்புக்குள் துறைமுக அதிகார சபை நில அளவை!

## இதனால் அங்கு பெரும் பரபரப்பு

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்ட பட்டினமும் சூழலும் பிரதேச செயலர் பிரிவில் உள்ள முத்து நகர் கிராமத்தில் நேற்று (03) இலங்கை துறை முக அதிகார சபையின் அதிகாரிகள் நில அளவை மேற்கொண்டனர்.

இதனை அடுத்து மக்கள் பலத்த எதிர்ப்பைக் காட்டினர். இதன் காரணமாக அங்கு கைகலப்பு ஏற்பட்டது.

பொது மக்களின் விவசாய, பயிர்ச் செய்கை, குடியிருப்பு காணிகளை நில அளவை செய்யும் நோக்கில் துறை முக அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் பொலிஸாருடன் வருகை தந்திருந்தனர்.

குறிப்பிட்ட காணிகளை தனியார் முதலீட்டுக்காகச் சூரிய மின் சக்தி உள்ளிட்டவற்றை மையமாக கொண்டு நீண்ட கால குத்தகைக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ள நிலையில் அங்கு மக்கள் கொதித்தொழுந்தனர்.

சம்பவ இடத்துக்கு தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொசான் அக்மீமன விஜயம் செய்து, குறித்த துறை முக அதிகார சபை உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இது தொடர்பில் உரிய அமைச்சுக்களின் பேச்சு நடத்திய பின்னர் முடிவெடுப்பது தொடர்பில் பரிசீலனை செய்யப்பட வேண்டும் எனக் கோரியதன் அடிப்படையில் அங்கிருந்து தற்காலிகமாக உரிய அதிகாரிகள் கலைந்து சென்றனர்.

காணிக்கான நில அளவீடும் பொது மக்களின் உதவியுடன் தடுத்து நிறுத்தப்பட்டது.

முத்து நகர் கிராமத்தில் பல வருட காலமாக விவசாயத்தை நம்பியே பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்றனர். இருந்த போதும் துறை முக அதிகார சபையினரின் அச்சுறுத்தல் தொடர்ந்தும் நீடித்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்



### சுவிஸில் தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவகம்

# தமிழ் மக்களின் சமூக மேம்பாட்டை இலக்காகக் கொண்டு உருவாக்கல்!

சுவிஸ் நாட்டில் வாழும் தமிழ்பேசும் தொழில் முனைவோர்களுக்கு இடையில் கூட்டுறவையும் ஒன்றிணைவையும் பலப்படுத்தித் தமிழ் மக்களின் அறிவியல், சமூக, பொருளாதார, ஆன்மிக கலை பண்பாட்டு பாரம்பாரிய அலகுகளை கட்டியமைக்க, தாயகத்தில் உள்ள தமிழ் மக்களின் சமூக மேம்பாட்டை இலக்காகக் கொண்டு சுவிஸ் தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவகம் உருவாக்கப்பட்டுள்ளது.

தலைவர் இளையதம்பி சிறிதாஸ் தலைமையில் சூரிச் கில்டன் கார்டன் விடுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் சுவிஸில் வாழும் தமிழ் வர்த்தகர்களும் பெருந்தொகையான சமூக ஆர்வலர்களும் கலந்து கொண்டனர்.

சுவிஸில் வாழும் தொழில் முனைவோர்களுக்கு இடையில் கூட்டுறவு ஒற்றுமை, கூட்டு முயற்சிக்கு பங்காற்றுவதுடன் தமிழர்களின் கலை கலாச்சார பொருளாதார அறிவியல் உட்பட பல்வேறு மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு இந்த நிறுவகம் பங்காற்றும்.

அனைத்து அரசுகளின் ஒத்துழைப்புடன் இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் உற்பத்திகளை அதிகரிக்கக் கூடிய தொழில் முயற்சிகளை இயற்கை வளங்களுக்குப் பாதிப்பில்லாத வகையில் செயற்றிட்டங்களை வகுத்து இந்த நிறுவகம் ஊடாகச் செயற்படுத்தப்படவுள்ளனர் என்று அமைப்பின் தலைவர் இளையதம்பி சிறிதாஸ் தெரிவித்தார்.

அத்துடன் உலகளாவிய ரீதியில் உள்ள தனவந்தர்கள், தொழில் அதிபர்கள் உட்பட பல்வேறு தரப்பினரின் நிபுணத்துவ சேவையையும் பெற்றுக் கொண்டு இலங்கையில் புதிய முதலீடுகள், தொழில் முயற்சியாண்மை வேலைத் திட்டங்களில் ஈடுபடவிரும்பும் தொழில் முனைவோருக்கு ஆலோசனைகளையும் ஒத்தாசைகளையும் வழங்கவுள்ளனர்



தலைவர் மேலும் தெரிவித்தார்.

சுவிஸில் வாழும் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட 18 வயதுக்கு மேற்பட்ட தொழில் முனைவோர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் அமைப்பின் உறுப்புரிமையைப் பெறமுடியும் என்று அமைப்பின் செயலாளர் இராசமாணிக்கம் ரவிந்திரன் தெரிவித்தார்.

நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய சமயக் குருக்களும் சமூக ஆர்வலருமான சசிக்குமார் தர்மலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில்,

சுவிஸ் தமிழ் வர்த்தகர்களுக்கு நமது சமூகத்தை நோக்கி பல்வேறு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதற்கமைய இந்த நிறுவனத்தைச் சிறந்த முறையில் கட்டியெழுப்பி ஆக்க பூர்வமான சிந்தனைகளுடன் செயற்படவேண்டும்.

தற்போது சுவிஸ் நாட்டில் 11500 இற்கு மேற்பட்ட தமிழர்கள் ஓய்வூதியத்தைப் பெறவுள்ளனர். இவர்களுக்கான எதிர்கால வாழ்க்கையைப் பெற்றுக் கொடுக்க மூதாளர்கள் தங்குவதற்கான இல்லம் ஒன்றையும் அமைக்கவுள்ளோம்.- என்றார்.



# பாதுகாப்பற்ற வெளிநாட்டு வேலையால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பான ஆய்வு!

(நூருல் ஹுதா உமர்)

மனித அபிவிருத்தி ஸ்தாபனம் அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு, நிந்தவூர், கல்முனை, கல்முனை உப பிரதேச செயலகங்களுடன் இணைந்து பாதுகாப்பான புலம்பெயர் தொழில் (வெளிநாட்டு வேலை) தொடர்பான விழிப்புணர்வு செயற்றிட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வருகின்றது.



இந்தச் செயற்றிட்டத்தின் முக்கிய செயற்பாடாகத் துறைசார்ந்த அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் அமைப்பு பிரதிநிதிகளை உள்ளடக்கிய கலந்துரையாடலை மேற்கொண்டு இலங்கையில் இருந்து புலம்பெயர் தொழிலாளர்களாக செல்பவர்கள் பாதுகாப்பாக செல்வதற்கு விதிமுறைகளை பின்பற்றிச்செல்ல ஊக்கப்படுத்தல் மற்றும் அதில் காணப்படும் நடைமுறைப் பிரச்சினைகளைநிவர்த்திசெய்வதற்கான புதிய சட்டத் திருத்தங்களை மேற்கொள்ளவதற்கான பரிந்துரைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

மனித அபிவிருத்தி ஸ்தாபன உதவி இணைப்பாளர் எம். ஐ. றியாழ் தலைமையில் காரைதீவு லேடி லங்கா மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் வளவாளராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ.சி.ஏ.அஸீஸ், ஆய்வு வழிநடத்துனராக தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அனுசியா சேனாதிராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

பங்குபற்றுனர்களாக மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் துறைசார்ந்த அரச உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கினர்.





# தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலை புதிய கட்டடத்துக்கான கிரகப் பிரவேசம்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரனின் நிதி ஒதுக்கீட்டில் தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்துக்குக் கிரகப் பிரவேசம் செய்யப்பட்டது.

பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ் தலைமையில் நேற்று (3) இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ், பிரதி அதிபர் இளங்கோ, பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் விஜயகுமார், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துக்கொண்டனர்.





# சீமானுக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு உச்ச நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது

## சமரசமாக பேசி முடிவெடுப்பதற்கு அவகாசம்



நடிகை விஜயலட்சுமி விவகாரத்தில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானுக்கு எதிரான பாலியல் வழக்கு விசாரணைக்கு உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

சீமான், தன்னை திருமணம் செய்து கொள்வதாகக் கூறி பாலியல் ரீதியாக ஏமாற்றிவிட்டார் என நடிகை விஜயலட்சுமி கடந்த 201 ஆம் ஆண்டு வளசரவாக்கம் பொலிஸில் புகார் அளித்தார். அதன்பேரில் பொலிஸார் சீமான் மீது பாலியல் துன்புறுத்தல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் கடந்த 2011 ஆம் ஆண்டு வழக்குப் பதிவு செய்திருந்தனர்.

இந்த வழக்கை ரத்து செய்யக்கோரி சீமான் தாக்கல் செய்திருந்த மனுவை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற தனி நீதிபதி, கடந்த 17 திகதி சீமான் மீதான பாலியல் வழக்கை ரத்து செய்ய முடியாது என மறுப்பு தெரிவித்தார். மேலும், கருக்கலைப்பு உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுக்கு முகாந்திரம் உள்ளதால், சீமானுக்கு எதிரான பாலியல் வழக்கில் 12 வார காலத்துக்குள் இறுதி அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டுமென வளசரவாக்கம் பொலிஸாருக்கு உத்தரவிட்டு சீமான் தாக்கல் செய்திருந்த மனுவை தள்ளுபடி செய்தார்.

சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுப்படி சீமான் வளசரவாக்கம் பொலிஸ் நிலையத்தில் ஆஜராகி பொலிஸார் கேட்ட பல்வேறு கேள்விகளுக்கு பதிலளித்தார். இந்நிலையில் சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு தடை கோரி சீமான் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தார்.

இந்த மனு நீதிபதி பி.வி.நாகரத்னா தலைமையிலான அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது சீமான் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் கோபால் சங்கரநாராயணன்,

“மனுதாரரான சீமானுக்கு எதிராக கடந்த 2011ஆம் ஆண்டு அளிக்கப்பட்ட இந்த பாலியல் புகார் அரசியல் காரணங்களுக்காக மீண்டும் தூசி தட்டப்பட்டுள்ளது.

சீமானுக்கு எதிராக புகார் அளித்த அந்த நடிகையே 3 முறை வழக்கை திரும்பப்பெற்றுள்ளார். விஜயலட்சுமியுடன் பழக்கம் இருந்து பின்னர் இருவரும் பிரிந்து விட்டனர். சீமானுக்கு எதிரான புகாரை திரும்பப் பெற்றுக்கொள்வதாக அவரே கடிதமும் கொடுத்துள்ளார். தற்போது சீமானை துன்புறுத்தும் நோக்கில் பழைய புகாரின் பேரில் பதியப்பட்ட வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்ய சென்னை உயர் நீதிமன்றமும் உத்தரவிட்டுள்ளது. இதனால் சீமானின் அரசியல் பொதுவாழ்வுக்கு கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது” என்றார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், “இதனால் புகார் அளித்த அந்த பெண்ணும் பாதிக்கப்பட்டுள்ளார் தானே. அதையும் கருத்தில் கொள்ள வேண்டும். பாலியல்ரீதியாக பாதிக்கப்பட்ட அந்த பெண்ணுக்கு இழப்பீடு எதுவும் வழங்கப்பட்டுள்ளதா?” என்றனர்.

அதற்கு சீமான் தரப்பில், “விஜயலட்சுமியுடன் தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தை நடத்தி உரிய இழப்பீடு வழங்க முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்.” என தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்து நீதிபதிகள், சீமானுக்கு எதிராக நடிகை விஜயலட்சுமி அளித்த புகார் மீதான பாலியல் வழக்கின் விசாரணைக்கு இடைக்கால தடை விதித்தனர். அந்த வழக்கில் விசாரணை மேற்கொண்டு 12 வார காலத்துக்குள் இறுதி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்ற உயர் நீதிமன்ற உத்தரவுக்கும் தடை விதித்ததோடு, இந்த மேல்முறையீட்டு வழக்கில் எதிர்மனுதாரர்கள் பதிலளிக்க நோட்டீஸ் பிறப்பித்தனர். பின்னர், விசாரணையை மே மாதத்துக்கு தள்ளிவைத்தனர்.

மேலும் இந்த இடைப்பட்ட காலத்தில் உரிய இழப்பீடு வழங்குவது தொடர்பாக இருதரப்பிலும் சமரசமாக பேசி முடிவெடுக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளனர்.

# முதல்வர் ஸ்டாலினின் தாயார் மருத்துவமனையில் அனுமதி



தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் தாயார் தயாளு அம்மாள் உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வயது முதிர்வின் காரணமாக ஏற்பட்ட பாதிப்பால் அவர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தயாளு அம்மாள், சென்னை கோபாலபுரத்தில் உள்ள இல்லத்தில் வசித்து வருகிறார். வயது முதிர்வு சார்ந்த அசௌகரியங்கள் காரணமாக அவர் கடந்த பல ஆண்டுகளாகவே பொதுவெளியில் வருவதில்லை. சமீபத்தில் தனது 72 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடிய முதல்வர் ஸ்டாலின் கோபாலபுரத்தில் உள்ள இல்லத்துக்குச் சென்று தனது தாயார் தயாளு அம்மாளிடம் ஆசி பெற்றுவந்தார்.

இந்நிலையில், தயாளு அம்மாளுக்கு நேற்று திங்கள் கிழமை திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டது. இதனையடுத்து சென்னை க்ரீம்ஸ் சாலை அப்பல்லோ மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டார்.

மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட தயாளு அம்மாளுக்கு விரிவான மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. தயாளு அம்மாளுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்ட விவரம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, தாயாரைக் காண மருத்துவமனைக்குச் சென்ற முதல்வர் ஸ்டாலின் அவருக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் விசாரித்து அறிந்தார். தயாளு அம்மாளுக்கு 92 வயதாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையில் துப்பாக்கிச் சூடு

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் பாதுகாப்பு படையினர் இடையில் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது.

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தானின் வடமேல் பகுதியில் உள்ள டோர்காம் முக்கிய எல்லைப் பகுதியாக காணப் படுகிறது.

இந்த பகுதியில் தினமும் நூற்றுக்கணக்கான லொறிகள் சென்று வருகின்றன.

இந்த நிலையில் நேற்று ஆப்கானிஸ்தான் பாதுகாப்புப் படையினர் டோர்காம் எல்லையில் பாகிஸ்தான் எல்லை நிலையங்களை (Border Post) குறிவைத்து துப்பாக்கிச் சூடு தாக்குதல் நடத்தினர்.

அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் பாகிஸ்தான் படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர் எனப் பாகிஸ்தான் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



இதனால் டோர்காம் எல்லையின் இரு பக்கங்களிலும் ஆயிரக்கணக்கான லொறிகள் மற்றும் வாகனங்கள் நீண்ட வரிசையில் நிறுத்தப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.






# இறக்குமதி பொருள்கள் மீதான வரி விதிப்புகளை ட்ரம்ப் உறுதிப்படுத்தியதால் பங்கு சந்தைகள் சரிவு

மெக்சிகோ, கனடா மற்றும் சீனா ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது விதிக்கப்பட்ட வரியானது இன்று முதல் அமுலுக்கு வருவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் உறு திப்படுத்தியுள்ளார்.

இதன் காரணமாக அமெரிக்கப் பங்குச் சந்தை பாரியளவு வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதைத் தொடர்ந்து மெக்சிகோ, கனடா மற் றும் சீனா ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீதான வரியை அதிகரித்தார்.

இதன்படி, மெக்சிகோ மற்றும் கனடா ஆகிய நாடுகளின் பொருள்களுக்கு 25 சதவீதமும், சீனாவிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு 10 சதவீதமும் வரி அதிகரிக்கப்பட்டது.

அதேபோன்றே ஐரோப்பிய ஒன்றி யத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கும் வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குறிப் பிட்டிருந்தார். இருப்பினும் இந்த நிலை மையானது வட அமெரிக்கப் பொருளா தாரத்திற்குக் கடுமையான பின்ன டைவை ஏற்படுத்தும் எனத் தலைமை நிர்வாக அதிகாரிகள் மற்றும் பொரு ளாதார வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.





# 20 மனைவிகளுடன் மகிழ்ச்சியாக வாழும் தான்சானியா நாட்டவர்

தான்சானியா நாட்டை சேர்ந்த ஒருவர் 20 மனைவிக ளுடன் வாழ்ந்து வருகிறார்.

பழங்குடியினத்தில் திருமணத்திற்கு தடையில்லாததின் காரணத்தினால் அவர் 20 திருமணங்களை செய்து கொண்டுள்ளார் என தெரிய வருகிறது.

கபிங்கா எனப் பெயர் கொண்ட இந்த நபர் 20 மனைவிகளுடன் ஒரே வீட்டில் தகராறு இல்லாமல் வாழ்ந்து வருகிறார். அவருக்கு ஆண்களும் பெண்களுமாக 104 பிள்ளைகளும் 144 பேரன் பேத்திகளும் இருக்கின்றனர் என தெரியவந்துள்ளது.

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 04/03/2025

**இணையத்தள மோசடிகள்; கனடாவில் எச்சரிக்கை**

இணையத்தில் புதியதாக உருவாகும் மோசடிகள், கடின உழைப்பில் சம்பாதித்த பணத்தை களவாடும் ஒரு பாரிய அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளதாக எச்சரிக்கை 02▶



# மன்னர் சார்ள்ஸை சந்தித்தார் ட்ரூடோ

**கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இங்கிலாந்து மன்னர் மூன்றாம் சார்ள்ஸை நேற்று சந்தித்துள்ளார்.**

**இங்கிலாந்தின் சான்றிங்கம் மாளிகையில் இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது.**

**அமெரிக்காவின் 51 ஆம் மாநிலமாக கனடாவை இணைக்க வேண்டும் என ட்ரம்ப் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார்.**

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கனடா மீது அழுத்தங்களை பிரயோகித்து வரும் நிலையில் அந்த விவகாரங்கள் தொடர்பில் பேக்கிங்ஹாம் அரண்மனை எவ்வித கருத்துக்களையும் இதுவரையில் வெளியிடவில்லை.

கனடாவின் இறையாண்மையை பாதுகாப்பது மிகவும் முக்கியமானது என பிரதமர் ட்ரூடோ தெரிவித்துள்ளார். இந்த நிலையில் கனடா இதற்கு பதிலளிப்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றது.





# தீ விபத்தில் மீட்கப்பட்ட சடலம் அடையாளம் காணப்பட்டது

கனடாவின் நோபில்டனில் தீ வைத்து எரிக்கப்பட்டது எனக் கூறப்படும் உணவகத்திற்குள் ஒரு ஆணின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் கடந்த 16 ஆம் திகதி ஹைவே 27 மற்றும் கிங் ரோடு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

யோர்க் பிராந்திய பொலிஸாருக்கு தீ பற்றிய தகவல் கிடைத்ததை தொடர்ந்து அவசர சேவைகள் சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளன.

தீயணைப்புப் படையினர் தீயை கட்டுப்படுத்தியபோது, உணவகத்திற்குள் ஒரு நபரின் சடலம் காணப்பட்டது. இந்த தீ விபத்து சந்தேகத்திற்கிடமானது என்பதால், ஒன்டாரியோ தீ பாதுகாப்பாளர் அலுவலகம் (Ontario Fire Marshal) விசாரணையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக YRP தெரிவித்துள்ளது.

தற்போது, உயிரிழந்தவர் மிசிசாகாவைச் சேர்ந்த 22 வயது பசாம் மஹைடாட் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்த தீ விபத்து தொடர்பில் மிசிசாகாவைச் சேர்ந்த 22 வயது சயீத் அல்ஷூபாக்கே மீது இரண்டாம் கொலை குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன.

இந்த குற்றச்சாட்டுகள் இன்னும் நீதிமன்றத்தில் பரிசீலிக்கப்படவில்லை. இது குறிவைத்த தாக்குதலாக இருக்கலாம் என விசாரணையாளர் கூறியுள்ளனர்.

சம்பவம் நடந்த நேரத்தில் அந்த பகுதியில் இருந்தவர்கள், கண்காணிப்பு கேமராக்கள் அல்லது டாஷ்கேம் காணொளி காட்சிகளை பரிசோதிக்குமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.



## இணையத்தள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மோசடி காரணமாக, ஒன்டாரியோவில் ஓக் வில்லே பகுதியில் வசிக்கும் 82 வயது வால்டர் யாம்கா, தன் வாழ்நாள் சேமிப்பில் பெரும் பகுதியை இழந்துள்ளார்.


வாழ் நாள் சேமிப்பினை முதலீடு செய்திருந்த நிலையில், அந்த முதலீடு முதிர்வு காலத்தை எட்டியதைத் தொடர்ந்து அவர் அதிக வட்டி வீதம் கிடைக்கக் கூடிய முதலீடுகளை இணையத்தில் தேடியுள்ளார்.

இதன் போது இணைய விளம் பரமொன்றில் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் முதலீடு செய்து பெருந் தொகை பணத்தை இழக்க நேரிட் டுள்ளது.

முதலீடுகளுக்கு சுமார் 6.5 வீத வட்டி வழங்குவதாக அறிவிக்கப்பட்ட தாகவும் பின்னர் எவ்வித வட்டியோ முதலோ கிடைக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த நிறுவனம் ஓர் போலி நிறுவ னம் பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதா கவும் யாம்கா தெரிவித்துள்ளார்.

இணைய வழியில் முதலீடுகளை செய்யும் போது மிகுந்த அவதா னத்துடனும் எச்சரிக்கையுடனும் பணத்தை முதலீடு செய்ய வேண்டு மென அறிவுறுத்தல் வழங்கப்பட் டுள்ளது.




# பிரிட்டிஷ் கொலம்பியவில் மீண்டும் நிலநடுக்கம்!

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் திங்கள் கிழமை அதிகாலை மிதமான நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

வான்கூவர் தீவுக்கும், வொஷிங்டன் மாநிலத்திற்கும் இடையில் அதிகாலை 5:02 மணியளவில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

இது முதலில் 4.6 ரிக்டர் அளவிலாக பதிவு செய்யப்பட்டது, பின்னர் 4.1 ஆக திருத்தப்பட்டது.

விக்டோரியா, வாங்கூவர் மற்றும் அருகிலுள்ள பகுதிகளில் மக்கள் இந்த நிலநடுக்கத்தை உணர்ந்தனர்.

இந்த நிலநடுக்கம் காரணமாக இதுவரை எந்த விதமான சேதமும் ஏற்படவில்லை எனவும், சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பெப்ரவரி மாதம் 13 மற்றும் 21 ஆம் திகதிகளிலும் பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் நிலநடுக்கம் உணரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் தொடர்ந்து நிலநடுக்கங்கள் ஏற்படுவதால், மக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.



# கனடாவில் வௌவால் ரேபீஸ் தொற்று தொடர்பில் எச்சரிக்கை

கனடாவில் வௌவால் ரேபீஸ் தொற்று குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடாவின் ஹமில்டன் பகுதியில் நோய்த் தொற்றுக்கு இலக்கான ஒருவர் பதிவாகியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

ஹமில்டன் பொதுச் சுகாதார அலுவலகம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இந்த ஆண்டில் பதிவான முதல் வௌவால் ரேபிஸ் தொற்று இதுவெனத் தெரிவிக்கப்படுகின்றது.

வௌவால்கள் மற்றும் ஏனைய விலங்குகளின் அருகாமைக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. சில விலங்குகளின் ஊடாக இந்த ரேபீஸ் வைரஸ் தொற்று ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ரேபீஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட நபருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.